### இதுவரை காப்பீடு செய்யாத விவசாயிகள் மட்டும் காப்பீடு செய்யலாம்!

# சம்பா நெற்பயிர் காப்பீட்டிற்கான காலவரம்பு நவ.30 வரை நீட்டிப்பு!

## அமைச்சர்.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

சென்னை, நவ. 17 - வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் தற்போது, விவசாயிகள் சம்பா நெற்பயிரை முழு வீச்சில் சாகுபடி செய்து வருகின்றனர். இது வரை 26.25 இலட்சம் ஏக்கர் பரப்பில் சம்பா நெற்பயிர் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நாள் வரை, 6.27 இலட்சம் விவசாயிகளால் 15 இலட்சம் ஏக்கர் சம்பா நெற்பயிர் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது மொத்த சாகுபடி பரப்பில் 57 சதவீதமாகும். இதே நாளில் கடந்த வருடம் 10 இலட்சம் ஏக்கர் சம்பா நெற்பயிர் காப்பீடு செய்யப்பட்டது.

இந்நிலையில், தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், மதுரை, புதுக்கோட்டை, கரூர், சேலம், திருப்பூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, தேனி, இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, அரியலூர், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை, தருமபுரி, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், சிவகங்கை, கடலூர், திருவள்ளூர் மற்றும் ஈரோடு ஆகிய27 மாவட்டங்களில் சம்பா நெற்பயிரை காப்பீடு செய்வதற்கான கடைசி தேதி 2025 நவம்பர் 15ஆம் தேதி என அறிவிக்கை செய்யப்பட்டது.

எனினும் பல மாவட்டங்களில் தொடர் மழையின் காரணமாக குறுவை நெல் அறுவடை மற்றும் சம்பா நெல் நடவு பணிகள் தாமதமானதாலும், வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்த பணிகளில் கிராம நிர்வாக அலுவலர்கள் ஈடுபட்டுள்ளதால் அடங்கல் வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டதாலும், சம்பா/ தாளடி/ பிசானம் நெற்பயிர் காப்பீட்டுக்கான கடைசி தேதியை நீட்டிக்க வேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கைக்கிணங்க, விடுபட்ட அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தின் கீழ் பயன் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன், தமிழ்நாடு அரசின் கோரிக்கைக்கிணங்க சம்பா/ தாளடி/ பிசானம் நெற்பயிர்க் காப்பீட்டுக்கான கடைசி தேதியை 2025 நவம்பர் 30ஆம் தேதி வரை நீட்டித்து ஒன்றிய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் துரித நடவடிக்கையின் பேரில் சம்பா/ தாளடி/ பிசானம் நெற்பயிர் செய்யும் விவசாயிகளின் நன்மையை கருதி பயிர் காப்பீடு செய்யும் காலக்கெடு வானது நவம்பர் 30 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. எனவே வேளாண்மைத் துறை அலுவலர்கள் தத்தம் பகுதிகளில் உள்ள விவசாயிகளை அணுகி பயிர் காப்பீடு செய்திடும் நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

எனவே, அரியலூர், செங்கல்பட்டு, கடலூர், தருமபுரி, ஈரோடு, கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், கரூர், மதுரை, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், இராணிப்பேட்டை, சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், தேனி, திருச்சி, திருப்பத்தூர், திருப்பூர், திருவள்ளூர், திருவண்ணாமலை, திருவாரூர், வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில், இதுவரை சம்பா நெற்பயிரை காப்பீடு செய்யாத விவசாயிகள் உரிய ஆவணங்களுடன் பொது சேவை மையங்கள், தொடக்க வேளாண் கடன் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் நவம்பர் 30ம் தேதிக்குள் பதிவு செய்து பயனடையுமாறு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட, ஆலந்தூர் மண்டலம், 164வது வார்டு அ.தி.மு.க.வைச் சேர்ந்த முன்னாள் வட்டச் செயலாளரும், தற்போதைய வட்ட துணைச் செயலாளருமான எல்.தனசேகர் தலைமையில் 10க்கும் மேற்பட்ட அ.தி.மு.க.வினர் அக்கட்சியில் இருந்து விலகி மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான தா.மோ.அன்பரசன் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். உடன் ஜே.ஏசுதாஸ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்..

கும்முடிப்பூண்டி பேரூராட்சிக்குட்பட்ட தாமரை ஏரியில் கும்மிடிப்பூண்டி சிப்காட் தொழிற்பேட்டையில் உள்ள தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் ரசாயன கழிவுநீர் கால்வாய் வழியாக தாமரை ஏரியில் தேங்குவதால் நிலத்தடி நீர் மிக மாசு ஏற்பட்டுள்ளதாக பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று தாமரை ஏரியை சுற்றி ஆய்வு செய்து சிப்காட் மற்றும் கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகளிடம் முன்னாள் மாவட்ட செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் தெரிவித்தார். உடன் மு.மணிபாலன், எஸ்.ரமேஷ், இரா.அறிவழகன், எம்.கேசவன், கே.வி.நாகராஜ், பா.பரத்குமார், எம்.முனிவேல், அர்ஜீனன், சுரேஷ், மஸ்தான், கஜேந்திரன், மணி, பேரூராட்சி செயல் அலுவலர் பாஸ்கர், ரவி உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

### துணை முதல்வர் பிறந்தநாளையொட்டி விளையாட்டுப் போட்டிகள்!

# கழகம் வெற்றி பெற்று முதல்வராக மு.க.ஸ்டாலின் மீண்டும் பொறுப்பேற்பார்!

## கரூரில் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. சூளுரை!

கரூர், நவ.17–

தி.மு.க. இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கரூர் மாவட்ட தி.மு.க. சார்பில், ஆண், பெண் அணிகளுக்கான சிலம்ப போட்டி நடைபெற்றது. கரூர் திருவள்ளுவர் விளையாட்டு மைதானத்தில் பெண்களுக்கான சிலம்பம் போட்டியை கரூர் மாவட்ட செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்.

பின்னர் செந்தில் பாலாஜி செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இன்று தொடங்கி டிசம்பர் மாதம் வரை தொடர் விளையாட்டு போட்டிகள் நடைபெற உள்ளது. மகளிர் சிலம்பம், ஆடவருக்கான சிலம்பம் போட்டிகள் தொடர்ந்து கபடி, வாலிபால், கிரிக்கெட், உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற உள்ளன. கரூர் மாவட்ட விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளை ஊக்குவிக்கும் வகையிலும், அவர்கள் மேலும் மாநில அளவிலும் வெளிநாடுகளுக்கும் சென்று விளையாடி தமிழ் நாட்டிற்கு பெருமை சேர்க்கின்ற வகையில், தேவையான உதவிகளையும் செய்து சிறப்பு கவனம் செலுத்தி வருகிறோம்.

முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஏற்கனவே பள்ளி, கல்லூரிகள் அளவில் விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டன. துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளையொட்டி அனைத்து தரப்பினரும் பங்கேற்கின்ற வகையில் மாபெரும் விளையாட்டு திருவிழா நடத்தப்படுகிறது. சிலம்பம் போட்டிக்கு மொத்தம் 49 லட்சம் ரூபாய் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

பீகார் தேர்தல் குறித்து அவரவர் கருத்துக்களை தெரிவித்து வருகின்றார்கள். இருப்பினும், தமிழ் நாட்டைப் பொருத்தவரையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திட்டங்கள், சாதனைகள், ஏழை எளிய அடித்தட்டு மக்களின் நலனை பாதுகாக்க கூடிய வகையில், வழி நடத்தி வருகின்றார்கள். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர், வழியில் நமது முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெறுகின்ற ஆட்சிதான் மீண்டும் அமையும். தொடர்ந்து இரண்டாவது முறையாக முதலமைச்சராக பதவி ஏற்க உள்ளார்கள்.

கரூர் வெண்ணைமலை கோவில் நில விவகாரத்தில் முந்தைய ஆட்சியாளர்கள் செய்த தவறு பெரிய பிரச்சனையாக ஆகி உள்ளது. தீர்வு காண முடியாத அளவுக்கு குழப்பத்தை உருவாக்கி இருக்கிறார்கள். அதிமுக ஆட்சியில் 2018 19 ம் ஆண்டுகளில் கோர்ட்டில் தாக்கல் செய்த ஆவணங்கள் குளறுபடிகளோடு தாக்கல் செய்யப்பட்டதால் 2019 ஆம் ஆண்டு கோர்ட் உத்தரவை பிறப்பித்தது.

குளறுபடியான ஆவணங்களை தாக்கல் செய்து குடியிருப்போருக்கு பிரச்சனையை ஏற்படுத்திவிட்டு, அங்கு போய் நாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் உங்கள் பிரச்சினையை தீர்ப்போம் என்று பொய் பிரச்சாரம் செய்கிறார்கள்.

இன்று வரை மக்களுக்கு தேவையான சட்ட உதவிகளை நாம்தான் செய்து வருகிறோம். கலெக்டர், எஸ்.பி என அதிகாரிகளுக்கு பல்வேறு உத்தரவுகள் பிறப்பிக்கப்படு கிறது.

**444 ஓட்டு வித்தியாசத்தில் வென்றவர் 420 ஆக வேலை செய்கிறார்**

கடந்த ஆட்சியில் இந்த இடங்கள் கோவில் நிலங்களாக மாற்றப்பட்டது. அதிமுக ஆட்சியில் வருவாய் மற்றும் அறநிலையத்துறை சார்பில் தாக்கல் செய்யப்பட்ட குளறுபடியான ஆவணங்களே பிரச்சனைக்கு காரணம். எனினும் உச்ச நீதிமன்றம் வரை சென்று பாதிக்கப்பட்டோருக்கு சாதகமாக முயற்சிகளை நாங்கள் எடுத்துள்ளோம். அப்பகுதி மக்களுக்கு சமூகத் தீர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதே அரசின் நோக்கம். ஒரு குழு அமைத்து ஆவணங்களை ஆராய்ந்து யாருக்கெல்லாம் இடம் சொந்தம் என்பதை கண்டறிய நீதிமன்ற உத்தரவு பெற முயற்சியை முன்னெடுத்து இருக்கின்றோம்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களது பொற்கால ஆட்சியில் வெண்ணமலை இட பிரச்சனைக்கு தீர்வு எட்டப்படும்.

444 ஓட்டுகளில் ஜெயித்தவர்கள் செய்த குளறுபடிகள், தவறுகள் காரணமாக மக்களை இந்த நிலைக்கு தள்ளிவிட்டதோடு, ஆட்சியில் இருந்தபோது எந்த விதமான வளர்ச்சித்திட்ட பணிகளையும் செய்யாமல், முழுவதுமாக அநீதி இழைத்து விட்டு, இப்போது இப்படி பொய் பிரசாரம் செய்வதை ப்ஃபோர்ட்வென்டி (420) என்று தான் சொல்ல வேண்டும். அதிமுக ஆட்சியில் இழைக்கப்பட்ட அநீதிகளை களைந்து மக்களுக்கு நியாயம் கிடைக்க திமுக ஆட்சி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

கடந்த ஆட்சியில் யார் இந்த குளறுபடிகளை செய்தார்களோ, யார் தவறான ஆவணங்களை தாக்கல் செய்தார்களோ, யார் இப்போது மக்களிடம் சென்று உங்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்வோம் என்று கூறினார்களோ, அவர்களே தான் வழக்கு போட்டவருக்கு முழு உதவியும் செய்தார்கள் என்பது மக்களுக்கு தெரியும்.

கரூர் தொகுதியில் அதுவும் வெண்ணை மலையில் மட்டும் தான் கோவில் நிலம் பிரச்சினை இருக்கிறதா?. வேறு எங்கும் இல்லையா?. வழக்கு நடத்துபவருக்கு தேவையான உதவிகள் அனைத்தையும் செய்தவர்கள் அதிமுகவினர் தான். இந்தப் பக்கம் வழக்கு போட்டு பிரச்சினை ஏற்படுத்துவது, அந்தப் பக்கம் வந்து மக்களை சந்தித்து ஆட்சிக்கு வந்தால் தீர்வு காண்போம் என்பது. ஒரு பக்கம் பிள்ளையை கிள்ளிவிட்டு மறுபக்கம் தொட்டிலையும் ஆட்டுகிறார்கள். ஏதோ ஒரு குழப்பத்தை ஏற்படுத்தி வாக்குகளை பெற்று விடலாம் என நினைக்கி றார்கள். ஆனால் மக்களோ எப்படியாவது இடத்தை காப்பாற்ற வேண்டும் என எண்ணுகிறார்கள். அவர்களுக்கு நாங்கள் துணை நிற்போம்.

இவ்வாறு செந்தில் பாலாஜி கூறினார்.

### தென்மேற்கு வங்கக் கடலில் உருவாகியுள்ள காற்றழுத்தத் தாழ்வு நிலை!

# தமிழ்நாட்டின் வட கிழக்கு, டெல்டா - கடலோர மாவட்டங்களில் கன மழைக்கு வாய்ப்பு!

## முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல்!

சென்னை, நவ.17 - தென்மேற்கு வங்கக் கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு காரண மாக தமிழ்நாட்டின் வடகிழக்கு, டெல்டா மற்றும் கடலோர மாவட்டங்களில் கன முதல் மிக கனமழை வரை பெய்யக்கூடும் என்பதால் மாவட்ட நிர்வாகம் அனைத்து முன்னெச்ச ரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளு மாறு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

தென் இலங்கை மற்றும் அதனை ஒட்டிய தென் மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய வளிமண்டல மேலடுக்கு சுழற்சியின் காரணமாக,

தமிழ்நாட்டில் கனமழை முதல் மிக கனமழைப் பொழிவு ஏற்படும் என இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள சிறப்பு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மாவட்டங்கள் விவரம் வருமாறு:-

17.11.2025 - கனமழை முதல் மிக கனமழை - காஞ்சிபுரம், விழுப்புரம். செங்கல்பட்டு, கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

கன மழை - சென்னை, திருவள்ளூர், கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் ஓரிய இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

18.11.2025 - கனமழை - சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, இராணிப்பேட்டை விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

19.11.2025 - கனமழை - கோயம்புத்தூர் மாவட்ட மலைப்பகுதிகள் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

கனமழை எச்சரிக்கை வரப்பெற்றுள்ள நிலையில், தமிழ்நாடு அரசு உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்களை அறிவுறுத்தியுள்ளது.

மேலும், மன்னார் வளைகுடா மற்றும் குமரி கடல் பகுதிகளில் சூறாவளி காற்று மணிக்கு 35 கி.மீ. முதல் 45 கி.மீ. வேகத்தில் வீசக்கூடும், இடை இடையே மணிக்கு 55 கி.மீ. வேகம் வரை காற்றின் வேகம் அதிகரிக்க கூடும் என்பதால் மீனவர்கள் மேற்குறிப்பிட்ட கடல் பகுதிகளில் மீன் பிடிக்க செல்ல வேண்டாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கனமழை எச்சரிக்கை வரப்பெற்றுள்ளதால், மாநில அவசர கால செயல்பாட்டு மையம் மூலம் நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி தொகுதிக்கு உட்பட்ட ஆர்.கே.பேட்டை கிழக்கு ஒன்றியம் எஸ்.வி.ஜி. புரம் ஊராட்சி சி.பி.கண்டிகை கிராமத்தில் SIR படிவம் பூர்த்தி செய்யும் பணிகளை மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ. நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார் உடன் ஒன்றிய செயலாளர் பா.சம்பத், தொகுதி பார்வையாளர் சண்முகநாதன்,நிர்வாகிகள் ஜி.சித்திக்அலி, ஏ.கே. திருவேங்கடம், நாகப்பன், டில்லி பாபு, குமரேசன், வடிவேல், ரமேஷ், திருநாவுக்கரசு, உள்பட பலர் உள்ளனர்

### துறைமுகம் மேற்குப் பகுதி

# 54வது வட்டச் செயலாளர் எம்.ஜெய்சங்கர் தாயார் மறைவு!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு – கழகத்தினர் அஞ்சலி

சென்னை, நவ. 17- துறைமுகம் மேற்கு பகுதி 54 வட்ட கழக செயலாளர் எம்.ஜெய்சங்கர் தாயார் எம்.கஸ்தூரி அம்மையார் (வயது 80) வயது மூப்பு காரணமாக நேற்று (16.11.2025 ஞாயிற்றுக் கிழமை) காலை 10.30 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு அம்மையாரின் திருவுடலுக்கு மலர் மாலை அணி வித்து அஞ்சலி செலுத்தினார். பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், கழக முன்னணியினர் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது இறுதிச் சடங்குகள் இன்று (17.11.25 திங்கட்கிழமை) காலை 9.00 மணியளவில் ஆர்.வி.நகர் இடுகாட்டில் உடல் தகனம் செய்யப்படுகிறது.

சோழிங்கநல்லூர் மத்திய பகுதி செம்மஞ்சேரி 200வது வட்டத்தில் (Special Intensive Revision) SIR வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் பணியில் ஈடுபட்டுள்ள (BLO) பாகநிலை அலுவலர்களுடன், BLA 2, BDA,BLC ஆகியோர்கள் இணைந்து பொதுமக்களுக்கு வாக்காளர் படிவத்தை வீடு வீடாக சென்று வழங்கிட வேண்டுமென தொகுதி பொறுப்பாளர் டாக்டர். நா.சந்திரபாபு, ச.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ. ஆகியோர்கள் ஆலோசனை வழங்கினார். இந்நிகழ்வில், வட்ட கழக செயலாளர் ஆர்நாகராஜ்,மாமன்ற உறுப்பினர் ஏ.முருகேசன், பகுதி துணைச் செயலாளர் வி.தனசேகரன் மற்றும் பி.எல்.ஏ.–2 பாகநிலை முகவர்கள்,கழக நிர்வாகிகள் அனைவரும் உடனிருந்தனர்.

### மதுக்கரை கிழக்கு ஒன்றியச் செயலாளர்

# விஜயசேகர் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் !

சென்னை, நவ. 17 –

கோவை தெற்கு மாவட்டம், கிணத்துக்கடவு, சட்டமன்றத் தொகுதி மதுக்கரை கிழக்கு ஒன்றிய செயலாளர் விஜயசேகர் அவர்கள் உடல்நலக் குறைவால் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரது மறைவு செய்தி அறிந்து, கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்கு தெரிவித்துள்ளார்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**பூண்டி கே. கலைச்செல்வன்**

**நவம்பர் 17 (2007)**

திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளராகவும், திருவாரூர் மாவட்ட ஊராட்சிக்குழு துணைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

மாவட்டத்தின் கழகத் தோழர்களுக்கெல்லாம் தோன்றாத் துணையாக விளங்கி, திருவாரூர் மாவட்டத்தில் கழகம் மேன்மேலும் பீடுநடை போட தளர்விலாது பணியாற்றியவர். கொடியோர் சிலரால் படுகொலைக்கு ஆளானார்.

"சுழன்று சுழன்று கழகப் பணியாற்றி வந்த காளை" என தலைவர் கலைஞரால் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.